# 280 எழுத்துக்களை ஆயுதமாக்கல்

200,000 ருவிட்டுகள் மற்றும் 4,000 பொட்ஸ்கள் இலங்கையில் ருவிட்டரின் நிலை பற்றி எமக்கு என்ன கூறுகின்றன?

சஞ்சன ஹத்தொட்டுவ, யுதன்ஜய விஜேரத்ன மற்றும் ரேமன்ட் ரொடோ

# 280 எழுத்துக்களை ஆயுதமாக்கல்

## 200,000 ருவிட்டுகள் மற்றும் 4,000 பொட்ஸ்கள் இலங்கையில் ருவிட்டரின் நிலை பற்றி எமக்கு என்ன கூறுகின்றன?

By சஞ்சன ஹத்தொட்டுவ, யுதன்ஜய விஜேரத்ன மற்றும் ரேமன்ட் செராடோ

## சாராம்சம்


மார்ச் கடைசிப் பகுதி தொடக்கம் *Groundviews* தளமும் இலங்கையின் ஏனைய சில ருவிட்டர் பாவனையாளர்களும், பாரிய எண்ணிக்கையில் புதிதாக ருவிட்டர் கணக்குகள் ஒரு சுனாமி அலையாக எழுந்துவருவதனை அவதானிக்கத் தொடங்கியிருக்கின்றார்கள். இந்த ருவிட்டர் கணக்குகள் சுயவிபர விளக்கங்கள், ருவிட்டுகள் மற்றும் ப்ரொபைல் படம் எவையும் இல்லாதவிதத்தில் வந்துகொண்டிருந்தன.

அதனையடுத்து மிகவும் சுவாரஷ்யமான அம்சங்களை இதில் அவதானிக்க முடிந்தது. நாமல் ரா'ஜபக்ஷவின் ருவிட்டர் கணக்குடன் இணைந்திருந்த பொட்ஸ்கள் (பொட்ஸ் என்பது ஆபத்தான அல்லது பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய தொழில்நுட்பமில்லை. ஆனால், உலகின் எந்த தொழில்நுட்பத்தையும் போல குறிப்பிட்ட ஒரு நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு வடிவமைக்கப்பட்ட தானியங்கி) மற்றும் போலியான பின்தொடர்பவர்களைப் போலன்றி இது வேறு விதமாகக் காணப்பட்டது. இந்த பொட்ஸ் ருவிட்டர் கணக்குகள் சிங்கள, முஸ்லிம் மற்றும் தமிழ் உச்சரிப்புடன் கூடிய பெயர்களைக் கொண்டிருந்தன. அவற்றில் காணப்பட்ட பெருந்தொகையான கணக்கு விவரங்கள் வேறு ருவிட்டர் கணக்குகளிலிருந்து படங்களை எடுத்திருந்தன. ஆனால், பெருந்தொகையான பெண் ருவிட்டர் கணக்குகள் ஏனைய நபர்களின் கணக்குகளிலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்களைக் கொண்டிருந்தன. இவற்றின் நோக்கம் மற்றும் பரிமாணம் என்வற்றின் அடிப்படையில் இலங்கையில் ருவிட்டர் துறையில் முதல் தடவையாக *Groundviews* அதன் பட்டியலை பகிரங்கமாக வெளியிட்டது. ஏனைய பயனாளர்கள் அவற்றைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. ஆனால், புதிதாக போலிக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு வந்த உயர் வேகத்துடன் ஒப்பிடும் பொழுது அதனை சமாளிப்பதற்கு இந்த வழிமுறை கூட போதியதாக இருந்து வரவில்லை. அத்தகைய போலிக் கணக்குகள் இலங்கையின் பிரபல்யமான ருவிட்டர் பாவனையாளர்களுடன் தம்மை இணைத்துக் கொண்டிருந்தன.

இது தொடர்பாக 1,262 ருவிட்டர் கணக்குகள் பூர்வாங்க ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டதுடன், நாங்கள் கவனத்தில் எடுத்த பாரிய தரவுத் தொகுப்பின் ஒரு உப தொகுப்பு ருவிட்டர் பாவனையாளர்களை பின்தொடர்ந்த சந்தேகத்திற்குரிய கணக்குகளில் பெரும்பாலானவை பொட்ஸ் ருவிட்டர் கணக்குகள் என்ற விடயத்தை எடுத்துக் காட்டியிருந்தது. இலங்கையிலிருந்து செயற்படும் முன்னணி இராஜதந்திரிகள், தூதுவர்கள், வெளிநாட்டு தூதுவராலயங்களின் உத்தியோகபூர்வ கணக்குகள், முன்னணி உள்நாட்டு அரசியல்வாதிகள், மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி, ஊடக நிறுவனங்கள், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் முன்னெடுப்புக்கள், முன்னணி ஊடகவியலாளர்கள், கிரிக்கட் வீரர்கள் மற்றும் ஏனைய தனிபர்கள் ஆகிய தரப்புக்கள் இவ்விதம் பெரும் எண்ணிக்கையிலான பொட்ஸ் பின்தொடர்புகளைக் கொண்டிருந்தன.


பொட்ஸ்கள் பின் தொடர்பவர்களாகக் கொண்டிருந்த இந்த 2,229 நபர்கள் தொடர்பான விவரங்களை ஆசிரியர்கள் தொகுத்தார்கள்: அவர்களுடைய பெயர்கள், அவர்களுடைய அமைவிடங்கள், மொழிகள், பகிரங்க விவரங்கள், கணக்கு உருவாக்கப்பட்ட திகதிகள், பின் தொடர்வோரின் எண்ணிக்கை மற்றும் ஏனைய விவரங்கள் என்பன இவ்விதம் தொகுக்கப்பட்டிருந்தன. அத்துடன், அவர்கள் கடைசியாக வெளியிட்ட 100 ருவிட்களும் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இதில் கூட்டாக எமக்கு 214,013 உருப்படிகளையும் சுமார் 71 மாதிரிகளையும் பெற்றுத்தந்தது.

பொட்ஸ்கள் இலங்கையின் ருவிட்டர் பாவனையில் ஒரு முதன்மையான அம்சமாக இருந்துவரும் நிலை மற்றும் எதிர்காலத்தில் தேர்தல்கள் அல்லது சர்வஜன வாக்கெடுப்பு என்பன அண்மிக்கும் சந்தர்ப்பத்தில் அவை மேலும் பரிமாணத்திலும், அளவிலும் அதிகரிக்கக்கூடிய நிலை என்பவற்றை கவனத்தில் எடுக்கும் பொழுது இந்தப் பிரச்சினையை எவ்வாறு கையாள்வது என்ற கேள்வி எழுகிறது. குறிப்பாக இதில் நேரடியாக சம்பந்தப்பட்டிருக்கும் பிரஜைகளின் எண்ணிக்கை மற்றும் அவ்விதம் சம்பந்தப்பட்டிருப்பவர்களின் செல்வாக்கை கொண்டிருக்கும் பிரஜைகளின் எண்ணிக்கை என்பவற்றின் பாரியளவைக் கருத்தில்கொள்ளும் போது இக்கேள்வி எழுகின்றது.

நோக்கம் மற்றும் தரவுகள் என்பவற்றுடன் கூடிய இந்த அறிக்கை நாங்கள் இப்பொழுது எதிர்கொண்டுவரும் அரசியல் களம் குறித்த ஒரு தெளிவான சித்திரத்தை வழங்குகின்றது. முதன்மையான சமூக வலைத்தளங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் முதலீடுகளினால் எதிர்காலத்தில் தோன்றக்கூடிய ஆபத்துக்களையும் அது எடுத்துக்காட்டுகின்றது. இந்த சமூக வலைத்தளங்கள் தற்பொழுது 18-34 வயதுப் பிரிவினரைச் சேர்ந்த குடித்தொகையினருக்கு மத்தியில் செய்திகளைப் பெற்றுக் கொள்வதற்கான முக்கியமான ஒரு வழிமுறையாக இருந்து வருகின்றது.

## பின்புலம்

2018 மார்ச் மாதத்தில் திகன மற்றும் கண்டிப் பிரதேசத்தில் கட்டவிழ்த்துவிடப்பட்டிருந்த வன்முறைச் சம்பவங்களின் உச்சக் கட்டத்தின் போது ஏனைய ருவிட்டுக்களுக்கு மத்தியில் வெளியிடப்பட்ட ஒரு ருவிட் செய்தி, ஒரு செய்தியின் உண்மைத் தன்மையை முதலில் பரீட்சித்துப் பார்க்காது சமூக வலைத்தளங்களில் அவற்றின் உள்ளடக்கத்திற்கு எதிர்வினையாற்றுவது அல்லது பதிலளிப்பது குறித்து ருவிட்டரில் *Groundviews* முன் எப்பொழுதும் இல்லாதவிதத்திலான ஒரு எச்சரிக்கையை விடுத்தது.[1]




2018 மார்ச் மாதம் 7ஆம் திகதி தொடக்கம் இன்னமும் ஒன்லைனில் இருந்துவரும் இந்த ருவிட்டின் ஒரு படத்தை, *Ground views* எடுத்துள்ளது. அது இதுவரையில் 64 பேரினால் விரும்பப்பட்டிருப்பதுடன், 14 தடவைகள் மீண்டும் ருவிட் செய்யப்பட்டுள்ளது. இந்த அறிக்கையை எழுதும் சந்தர்ப்பத்தில் விரும்புபவர்களின் எண்ணிக்கை 112ஆகவும் மீள் ருவிட் எண்ணிக்கை 23ஆகவும் அதிகரித்திருந்தது. இந்த ருவிட் முஸ்லிம் ஆண்களில் ஒரு கும்பல் சிங்கள மக்களை தாக்குவதற்காக வீதிகளில் நின்றிருக்கின்றார்கள் என்ற விடயத்தை குறிப்பிடுகின்றது. களத்தில், ஊடகங்களில், பொலிஸ் அல்லது அரசாங்கத்திலிருந்த எந்தவொரு நபரும் இந்தச் செய்தியை உறுதிப்படுத்தியிருக்கவில்லை. அல்லது அச்சந்தர்ப்பத்தில் அல்லது அதன் பின்னர் அதே பிரச்சினையை அல்லது சம்பவம் குறித்த ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கவில்லை. உண்மையில் இந்த ருவிட் ஜேர்மனி பிரான்ஸ்பேட் நகரிலிருந்து பிரசுரிக்கப்பட்டிருந்தது. மொபைல் தொலைபேசியில் அல்லது டெஸ்ரொப் கணணியில் இந்த ருவிட் செய்திக்கு பதிலளித்த பெருந்தொகையானவர்கள் அந்த விடயத்தை அவதானித்திருக்கமாட்டார்கள். நாட்டிற்குள்ளே என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்ற விடயம் குறித்து இலங்கைக்கு வெளியில் வாழும் ஒருவர் கூட செய்தியொன்றை வெளியிடுவது சாத்தியமானதாக இருந்துவந்தாலும் கூட இந்த ருவிட் செய்தியை மேலோட்டமாக வாசிப்பவர்கள் கூட அதனை நாங்கள் பாரதூரமாக எடுக்கவேண்டிய

[1]https://twitter.com/groundviews/status/971943162062159872
[2]https://twitter.com/groundviews/status/971943162062159872

அவசியமில்லை என்பதனை அவதானிக்க முடிகின்றது - அதாவது குப்பைகள், பூனைக்குட்டிகள், கரடி பொம்மைகள் மற்றும் உணவு என்பவற்றின் புகைப்படங்கள் என்பவற்றுடன் கூடிய ருவிட்டுகள் (மேல் ருவிட் போலவே) போன்றவற்றையும் நாங்கள் கவனத்தில் எடுக்கவேண்டியிருக்கின்றது. ஒரு நாள் முன்னர் @askhitauk என்ற மற்றொரு கணக்கு தமக்கு எதிராக வன்முறையை தூண்டியது தொடர்பாக முஸ்லிம்களை குறைகூறுவது விதத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்தது[2], இந்த ருவிட் 151 பதில்களையும், 61 முன் மீள் ருவிட்டுக்களையும், 322 விருப்பங்களையும் பதிவு செய்திருந்தது. அந்த பின்புலத்திற்கு வெளியிலிருந்து வாசிக்கும் பொழுது இங்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கும் உணர்வு நேரடியாக வெறுப்பினை தூண்டவில்லை என்றே கூறவேண்டும். ஆனால், அந்த ருவிட் செய்தி திகன வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்ற உச்சக்கட்டத்தின் போது பிரசுரிக்கப்பட்டிருந்தது என்ற விடயத்தை – அது இப்பொழுது இணையத்தில் இல்லாவிட்டாலும் கூட - இங்கு நினைவு கூர்வது முக்கியமாகும். இது தொடர்பாக மேலும் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளின் போது இந்த தொகுப்பு புகைப்படம் போலியானது என்ற விடயத்தை *Ground views* கண்டிறிந்திருந்தது. இதே விதத்திலான வேறு இன்னும் பல டசின் கணக்கான ட்விட்டுகள் இருந்துவந்தன.

இது ஒரு புதிய விடயமாகும். நான்கு வருடங்களுக்கு முன்னர் அழுத்கம வன்முறைச் சம்பவங்களின் போது அச்சம்பவங்களை இணையத்திலும், சமூக வலைத்தளங்களிலும் அறிக்கையிட்ட ஒரு சில அமைப்புக்களில் ஒன்றாக *Ground views* இருந்து வந்தது. அச்சந்தர்ப்பத்தில் நாங்கள் ருவிட்டர் தொழில் நுட்பத்தை பரவலான விதத்தில் பயன்படுத்தியிருந்தோம். இருந்தபோதிலும் ருவிட்டரை ஆயுதத்தைப் போன்று பயன்படுத்தி பயன்படுத்தியிருக்கவில்லை. இதற்கான ஒரு உதாரணம், மியன்மாரிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு படம் மற்றும் மியன்மாரில் ரகையின் மாகாணத்திலிருந்து எடுக்கப்பட்ட ஒரு படமாகும். அது அழுத்கம வன்செயலின் விளைவாக இடம்பெற்ற ஒரு படமாக காட்டப்பட்டிருந்தது. கூகுல் படங்கள் தொகுப்பாக மிக எளிமையாக தேடப்பட் ஒரு தேடலை அடுத்து அத்தகைய விதமான வதந்திகள் பரவலுக்கு முற்றுப்புள்ளி இடப்பட்டது. மேலும், நாங்கள் அச்சந்தர்ப்பத்தில் ஏனைய ட்விட்டர் மற்றும் சமூக வலைதள பாவனையாளர்கள் தாம் மீள்ருவிட் செய்வதற்கும், விருப்பம் தெரிவிப்பதற்கும், பகிர்ந்து கொள்வதற்கும், அனுப்பிவைப்பதற்கும் அல்லது எதிர்வினையாற்றுவதற்கும் முன்னர் படங்களை எவ்வாறு சரி பிழை பார்த்துக் கொள்ளமுடியும் என்ற விடயத்தை எடுத்துக் காட்டியிருந்தோம்.

திகன வன்முறைக்கான நிகழ்வுகள் உருவாகி வந்த சந்தர்ப்பத்திலும் அந்த வன்முறை இடம்பெற்ற சந்தர்ப்பத்திலும் சமூக வலைத்தளங்களின் செயற்பாடு ஒரு வேறுபட்டளவில் இருந்து வந்தது. இதுவரையில் அதிகளவிலான கவனம் பேஸ்புக் தொடர்பாகவே செலுத்தப்பட்டு வந்திருந்தது. நியுயோர்க் ரைம்ஸ் பத்திரிகை 2018 ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி வெளியிட்ட அதன் அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றது[3],

> பெருந்தொகையான பாவனையாளர்களைப் பொறுத்தவரையில் செய்திகள் மற்றும் தகவல் என்பவற்றுக்கான முதன்மையான தளமாக இருந்து வரும் இணையதளத்தின் செய்தி தொகுப்புத் தளங்கள் (newsfeed) மீண்டும் மீண்டும் இனக் குரோதத்தைத் தூண்டும் தளங்களாகவே இருந்து வருகின்றன. உள்நாட்டு ஊடகங்களின் இடத்தை பேஸ்புக் அபகரித்துக் கொண்டிருக்கும் நிலையில் செய்தி தளங்களில் பிரசுரிக்கப்படும் செய்திகள் பரீட்சிப்புக்கள் எவையும் இல்லாத நிலையிலேயே தரவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன. இந்த நிறுவனத்தின் மீது அரசாங்கம் எத்தகைய கட்டுப்பாட்டையும் கொண்டிருக்கவில்லை. வெறுப்பைத் தூண்டு பிரச்சாரம் மற்றும் பொய்யான தகவல்கள் என்பவற்றால் தூண்டப்படும் ஒரு சில பாவனையாளர்கள் உண்மையான தாக்குதல்களுக்கு திட்டம் தீட்டுகிறார்கள். அதிகாரிகள், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் இணையத்தினால் ஆவேசமடைந்திருந்தும் சாதாரண பாவனையாளர்கள் ஆகியோருடன் நடத்தப்பட்ட நேர்காணல்களின் அடிப்படையில் இலங்கை வன்முறைக்குள் தள்ளிவிடப்பட்ட சந்தர்ப்ப சூழ்நிலைகள் குறித்த பகுப்பாய்வு வதந்திகள் தொடக்கம் கொலைகள் வரையில் ஒவ்வொரு மட்டத்திலும் பேஸ்புக்கின் செய்தித்தளங்கள் முதன்மையான ஒரு பாத்திரத்தை வகித்து வந்திருப்பதனை அறிய முடிகின்றது.

---


[3]Where Countries Are Tinderboxes and Facebook Is a Match, https://www.nytimes.com/2018/04/21/world/asia/facebook-sri-lanka-riots.html by Amanda Taub and Max Fisher, accessed 22 April 2018.

[4]http://truthy.indiana.edu/tools/networks/#?hashtag=%23digana&network_type=rm&start_date=3-1-2018&end_date=3-25-2018

அச்சந்தர்பபத்தில் ட்விட்டர் கண்காணிப்புக்களிலிருந்து தப்பியிருந்தது. உண்மையிலேயே அரசாங்கம் பேஸ்புக்கைத் தடை செய்த பின்னர் வன்முறை தொடர்பான செய்திகள் தகவல்கள் மற்றும் அபிப்பிராயங்கள் என்பவற்றை விநியோகிக்கும் முதன்மையான ஒரு அரங்காக ருவிட்டர் மாற்றமடைந்தது. களத்திலிருந்து உடனடியாக அனுப்பப்பட்ட பிந்திய செய்திகளையும் இது உள்ளடக்கியது. அச்சந்தர்ப்பத்தில் பேஸ்புக் அரசாங்கத்தினால் உத்தியோகபூர்வமாக தடை செய்யப்பட்டிருந்த போதிலும் VPNs தொழில்நுட்பத்தைக் கொண்டு அதனை அணுகக்கூடிய நிலை நிலவி வந்தது. அந்நிலையில் ஆசிரியர்கள் ஒருவரின் தனிப்பட்ட கணக்கும் (@sanjanah), (சிங்கள மொழியில் பிரசுரிக்கப்படும் (@vikalpavoices மற்றும் @groundviews) ஆகிய தளங்களும் ட்விட்டரில் பெருமளவுக்கு மீள் ட்விட் செய்யப்பட்ட மூலாதாரங்களாக இருந்து வந்தன. வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான பகுப்பாய்வு பிந்திய தகவல்கள், செய்திகள் மற்றும் தகவல்கள் இதற்கு ஊடாக பகிர்ந்து கொள்ளப்பட்டன[4] . இது சிரேஸ்ட ஊடகவியலாளரான @tingilye போன்றோரின் கணக்குகள் மற்றும் அதேபோல செயற்பாட்டாளர்களான @rukitweets மற்றும் @thyagir ருவிட்டுகளுக்கு ஊடாக பின்தொடரப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் அரசியல் தொடர்பாடல் மற்றும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட கருத்துக்கள் என்பன தொடர்பாக டெஸ்க்டாப் மற்றும் மொபைல் தொலைபேசி ஆகிய தளங்களில் முதன்மையான ஒரு செய்தித்தளமாக அது தன்னை ஸ்தாபித்துக் கொண்டிருந்தது.

அநேகமாக இந்நிலைமையின் விளைவாக வெகுவிரைவில் நிலைமைகள் ஆச்சரிப்படத்தக்க விதத்தில் மாற்றமடையத் தொடங்கின. மார்ச் மாத கடைசிப் பகுதியிலிருந்து *Ground views* தளமும் இலங்கையின் ஏனைய ருவிட்டர் பாவனையாளர்களும் சுயவிபரங்களோ ட்விட்டுகளோ புரொபைல் படமே இல்லாத பெருந்தொகையான ட்விட்டுகளின் வருகையை அவதானித்தார்கள். அது வழமையாக யாராவது ஒருவர் ருவிட்டர் கணக்கை ஆரம்பித்து வைப்பதாகவே இருந்து வந்தது. ஆனால், வெகு விரைவில் நாட்டின் செயற்பாட்டாளர்களிடமிருந்தும் பெருமளவுக்கு ருவிட்டர்களைப் பயன்படுத்துவோர்களிடமிருந்தும் முறைப்பாடுகள் வந்து குவியத் தொடங்கின. நாள் ஒன்றுக்கு சுமார் 20-40 பொட்ஸ்கள் இடம்பெற்றுவருவதனை அவர்கள் தெரிவித்தனர். புதிதாக பின் தொடர்பவர்கள் மித மிஞ்சிய அளவிலான எண்ணிக்கை எதிர்கொண்ட ஆரம்பக் கணக்குகள் @anushwij, @azambm, @drac, @iromip, @sachp, @ThyagiR & @vindib ஆகிய கணக்குகள் இருந்து வந்தன. ஆசிரியர்கள் இருவரில் @sanjanah மற்றும் @yudhanjaya ஆகியோரின் கணக்குகளும் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தன. தனது கணக்கில் இருந்த சுமார் 30,000 போலி பின் தொடர்பவர்களை நீக்கிவிடுவதற்கென ட்விட்டர் கணக்காய்வுக் கருவியை பயன்படுத்தியிருப்பதாக *Ground views* ஏப்ரல் முதலாம் திகதி ஒரு ருவிட் செய்தியை வெளியிட்டது. இந்த ருவிட் பத்தாண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட திகதி தொடக்கம் இந்த எண்ணிக்கை ஒன்றுதிரண்டு வந்திருந்தது. ஆனால், 2018 ஆம் ஆண்டிலிருந்து பெரும் எண்ணிக்கையிலான பின்தொடர்பவர்கள் இதில் இருந்தார்கள். அதே நேரத்தில் பொட்ஸ்கள் குறித்த உதாரணங்களுடன் கூடிய ஒரு ட்விட் செய்திக்கு ஊடாக *Ground views* அச்சந்தர்ப்பத்தில் முன் எப்பொழுதும் இருந்திராத அளவிலான இந்த நிலைமை குறித்து ருவிட்டர் நிறுவனத்திற்கு ஒரு எச்சரிக்கையை அனுப்பிவைத்திருந்தது. அதாவது அந்த போலி ருவிட்டுக்கள் முன்வைத்துவரும் ஆபத்துக்கள் அவற்றை இனங்கண்டு கொள்வது எப்படி என்பது குறித்த யோசனைகள் மற்றும் அவற்றை நீக்குவது எப்படி என்பது குறித்த யோசனை என்பன இதில் அடங்கியிருந்தன[5].

நாமல் ராஜபக்ஷவின் கணக்குடன் சம்பந்தப்பட்டிருந்த பொட்ஸ்கள் மற்றும் போலி பின்தொடர்பவர்கள் போலன்றி இந்த விடயத்தில் உடனடியாக ஒரு சில சுவாரஸ்யமான அம்சங்கள் தெரியவந்தன.[6] இந்த பொட்ஸ்கள் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் உச்சரிப்புடன் கூடிய பெயர்களைக் கொண்டிருந்தன. பெருந்தொகையான டுவிட்டர் கணக்குகள் படங்களின்றி இருந்தன. ஆனால், பெண்களின் பல கணக்குகள் ஏனைய தனிநபர்களின் மற்றும் இணையப் பொதுத்தளத்திலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்களைக் கொண்டிருந்தன[7]. இந்த போலி ட்விட்டுக்களின் பரிமாணம் மற்றும் விடயம்




என்பவற்றைக் கருத்தில் கொண்டு *Ground views* இலங்கையில் முதல் தடவையாக அது தொடர்பான பட்டியலை பகிரங்கப்படுத்தியது. அதன் காரணமாக ஏனைய பாவனையாளர்கள் அதனைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்து வந்தது. ஆனால் இந்த வழிமுறையும் கூட புதிய போலிக் கணக்குகள் உருவாக்கப்பட்டு வந்த உயர் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாததாக இருந்தது. இந்த போலிக் கணக்குகள் இலங்கையின் முதன்மையான டுவிட்டர் பாவனையாளர்களுடன் தம்மை சம்பந்தப்படுத்திக் கொண்டிருந்தது.

வேறு இடங்களில் தலைப்புச் செய்திகளை எடுத்து வந்திருந்ததுடன், சமூக ஊடக வலைதளங்களில் தன்னியக்க செயற்பாடுகளில் தீங்கு விளைவிக்கக்கூடிய தாக்கங்கள் குறித்த கல்விப்புலம் சார்ந்த ஆய்வுகளில் எடுத்துக்காட்டப்பட்டிருந்த விடயங்களை போலன்றி இந்த பொட்ஸ்கள் ஆச்சரியமானவையாக இருந்துவந்தன: அவை உண்மையில் எதனையும் கூறவுமில்லை, செய்யவும் இல்லை. அவை பெரும் எண்ணிக்கையில் மற்றவர்களைப் பின் தொடரும் டுவிட்டர் கணக்குகளாக இருந்துவந்தன. மேலும் அத்தகைய பதிவுகளைக் காட்டும் ஸ்கீர்சொட் படங்கள் கீழே இணைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் உச்ச கட்டத்தின்போது இத்தகைய போலி டுவிட்டர் கணக்குகளைத் தாம் தடை செய்ய தொடங்கியிருப்பதாக பலர் அறிவித்தார்கள். அநேகமாக மௌனமாக பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு கூட்டத்தினர் மீது அது எடுத்துவரக் கூடிய மோசமான தாக்கத்தை கருத்தில் கொண்டு அவர்கள் அவ்வாறு செய்திருக்க முடியும். அது மிகவும் அருவெறுப்பான விடயமாகும். அவ்விதம் பார்த்துக் கொண்டிருக்கும் மக்கள் கூட்டத்தினர் இச்சந்தர்ப்பத்தில் மிகவும் கட்டுப்படுத்த முடியாத விதத்தில் நடந்து கொள்வார்கள் என்பதனை எதிர்பார்க்க முடியாதிருந்தது. அடுத்து வந்த வாரங்களின் போது போலி டுவிட்டர்களை கையாளும் விடயம் அதீதமான அளவில் கால விரையத்தை எடுத்துவருவதாக இருந்து வருகின்றது என பலர் தமது விரக்தியை வெளிப்படுத்தியிருந்தார்கள். போலிக் கணக்குகளை கையாள்வதற்கான டுவிட்டர் நிறுவனத்தின் சொந்தக் கருவிகளும் பழையனவாகவும் இந்த அளவிலான போலி பின்

[6] Namal Rajapaksa, bots and trolls: New contours of digital propaganda and online discourse in Sri Lanka, http://groundviews.org/2018/01/24/namal-rajapaksa-bots-and-trolls-new-contours-of-digital-propaganda-and-online-discourse-in-sri-lanka/

[7] Namal Rajapaksa, bots and trolls: New contours of digital propaganda and online discourse in Sri Lanka, http://groundviews.org/2018/01/24/namal-rajapaksa-bots-and-trolls-new-contours-of-digital-propaganda-and-online-discourse-in-sri-lanka/

[7]This follows academic research on how bots have used, in the past and elsewhere, attractive photos from hotornot.com to be particularly effective at gaining influence.

தொடர்பவர்களை கையாள்வதற்கு ஆற்றலற்றவையாகவும் இருந்து வரும் நிலையில் அவர்களால் இந்நிலைமையை அறவே சமாளிக்க முடியாததாக இருந்து வந்தது.




இலங்கையில் ருவிட்டர் தளத்தில் இதுவரையில் நிகழ்ந்திராத ஓர் அற்புதம் போல் தோன்றிய இந்த விடயத்தைப் பார்க்கும் போது ஆசிரியர்களின் அக்கறை தூண்டப்பட்டது. இது மிகவும் அச்சத்தை ஏற்படுத்தும் ஒரு தீவிரத் தன்மையுடன் இடம்பெற்று வந்தது. எதிர்காலத்தில் என்றோ ஒரு நாள் ஜனநாயகத்திற்கு பாதகமான அபிப்பிராயங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டு இந்த பொட்ஸ்கள் பயன்படுத்த முடியும் என்ற அச்ச உணர்வையும் அது தூண்டியிருந்தது.

## கலந்துரையாடலுக்கான விடயங்கள்

பொட்ஸ்களை உற்பத்தி செய்யும் விடயம் தொடர்பாக உபாய ரீதியான ஒரு முதலீடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்ற விடயத்தை எமது அறிக்கை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. எமது பிராந்தியம் நெடுகிலும் இப்பொழுது பரவலாக அறிக்கையிடப்பட்டு வரும் இந்த விசேட நிகழ்வு குறித்து முதலில் பகுப்பாய்வு செய்பவர்களாக அல்லது முதலில் பகுப்பாய்வு செய்தவர்களில் ஒரு தரப்பினராக நாங்கள் இருந்துவர முடியும்.

*"மியன்மார், வியட்னாம், கம்போடியா மற்றும் ஏனைய தென்கிழக்கு ஆசிய நாடுகள் தொடர்பாக ருவிட்டர் தளத்தில் கருத்துக்களை முன்வைக்கும் அல்லது அந்நாடுகளில் வாழ்ந்துவரும் ஊடகவியலாளர்கள், புத்திஜீவிகள், செயற்பாட்டாளர்கள், தொழில் முனைவோர் மற்றும் ஐ.நா. அதிகாரிகள் ஆகியோர் கடந்த மார்ச் மாதத்தின் பிற்பகுதி தொடக்கம் நூற்றுக்கணக்கான – ஒரு சில சந்தர்ப்பங்களில் ஆயிரக்கணக்கான புதிய கணக்குகள் மூலம் பின் தொடரப்பட்டுள்ளார்கள். இவ்விதம் பாரிய எண்ணிக்கையில் நபர்களை பின் தொடரும் அற்புதம் சீனா, தாய்வான், ஹொங்கொங் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் நாடுகளிலும் இடம்பெற்றுகின்றது."*[8]




சிவில் சமூகத்துடன் சம்பந்தப்பட்டு செயற்படும் விடயத்திலும் பொறுப்பு மற்றும் வன்முறை என்பவற்றை தூண்டுவதற்கென அதன் தளங்கள் பயன்படுத்தப்படுவதனை நிறுத்துவதற்கென பயனுள்ள வழிமுறைகளை மேற்கொள்வதிலிருந்தும் பேஸ்புக் காட்டிவந்திருக்கும் வரலாற்று ரீதியான மற்றும் கவலையளிக்கத்தக்க தயக்க நிலையை போலன்றி இந்தப் பிரச்சினையை ஏற்றுக்கொள்ளும் விடயத்தில் ருவிட்டர் நிறுவனத்தைத் தூண்டுவதற்கென மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் வியப்பூட்டும் வகையில் மௌனமான எதிர்வினைகளையே எதிர்கொண்டுள்ளன. ஆசியர்களினால் அனுப்பிவைக்கப்பட்ட எந்தவொரு ருவிட் அல்லது மின்னஞ்சலும் நிறுவனத்தின் உயர் பிரதிநிதிகள் அல்லது உத்தியோகபூர்வ கணக்கு தாரர்களிடமிருந்து ஒரு எதிர்வினையைக் கூட ஏற்படுத்தியிருக்கவில்லை. ஒன்றில் இந்த மௌனம் நிறுவனம் இந்த நிலைமையை அவதானித்து வருகின்றது, ஆனால் அதன் பலத்தில் அதிக எண்ணிகையிலான பொட்ஸ்கள் பெருகிவருவதனை கையாள்வதற்கு என்ன செய்வது என்று அறியாதிருந்து வருகின்றது என்பதனை எடுத்துக் காட்ட முடியும். இந்த விடயம் குறித்து ஊடகங்கள் தொடர்ந்தும் சுட்டிக்காட்டி வந்துள்ளன[9].

எங்கள் வசம் சில கோட்பாடுகள் இருக்கின்றன. இவை இலங்கையில் பொட்ஸ்களின் பெருக்கம் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டிருக்கும் ஏனையவர்கள் இணையத்தில் வெளியிட்டிருக்கும் விடயங்களை குறைநிரப்பு செய்யும் விதத்தில் இருக்கும்[10]:

1. ருவிட்டர் கணக்குகள் மீதான தமது முற்றுகையை மூடி முறைக்கும் பொருட்டு அரசியல் தரப்புக்களினால் இந்த பொட்ஸ்கள் உருவாக்கப்பட்டிருக்க முடியும். *Ground views* தளம்

---

[8]https://www.ft.com/content/e59dba5a-421d-11e8-803a-295c97e6fd0b

[9] Twitter's huge bot problem is out of the bag, https://www.cnet.com/news/twitter-bot-fake-followers-problem-out-of-the-bag/

[10]*The curious case of Tikiri*, https://medium.com/throwaway-thoughts/the-curious-case-of-tikiri-1c7550cba74f by Drac

பகிரங்கமாகவும், தொடர்ந்தும் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் தொடர்புடைய ஒரு சில ருவிட்டர் கணக்குகளைப் (ட்ரோல்கள்) பரீட்சித்துப் பார்க்க வேண்டும் என்ற விடயத்தை கவனத்தில் எடுத்திருந்தது. அவ்வாறு செய்வதன் மூலம் பொட்ஸ்களின் முதன்மையான இலக்குகளாக எவை இருந்துவருகின்றன என்ற விடயத்தை அறிந்து கொள்ள முடியும்.

2. புதிய மோசடியான கணக்குகளைப் பதிவு செய்வதற்கு அநேகமாக பின்னைய திகதி ஒன்றில் மறு விற்பனை செய்வதற்கென அவ்வாறு பதிவு செய்வதற்கு தென் அல்லது தென்கிழக்கு ஆசிரியாவில் ஒரு வியாபாரி அல்லது மூன்றாம் தரப்பு போன்ற எவரேனும் ஒருவர் இவ்விதமான ஒரு IP முகவரியை பயன்படுத்த முடியும்.

3. தெரிவுசெய்யப்பட்ட ருவிட்டர் கணக்குகளைக் கண்காணிப்பதற்கும் பொதுவாக இலங்கையில் ருட்டர் தளம் கலந்துரையாடல் விடயங்களை கண்காணிப்பதற்கும் பொட்ஸ்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்ற கோட்பாட்டை நாங்கள் நம்பவில்லை. ஆயிரக்கணக்கான பொட்ஸ்களை உருவாக்குவதற்கான ஆற்றலுடன் கூடிய எந்தவொரு செயற்பாடும் நாங்கள் இங்கு செய்திருக்கும் விதத்தில் தரவுகளை கண்டறிவதற்கு இலகுவானதாக இருந்து வரும்.

4. எதிர்காலத்தில் அநேகமாக முதன்மையான தேர்தல் செயன்முறைகள் அல்லது சர்வஜன வாக்குரிமை என்பன தொடர்பான அரசியல் உரையாடலை கட்டுப்படுத்துவதற்கு/ வடிவமைப்பதற்கு இந்தக் கணக்குகள் பயன்படுத்தப்படக்கூடிய சாத்தியப்பாடு உண்மையில் காணப்படுகின்றது. இப்பொழுது அவை வெறுமனே செயலற்றுக் கிடக்கும் கணக்குகளாக இருந்துவருகின்றன. அவை அதிகரித்தளவில் சோம்பல் மிக்க விதத்தில் உருவாக்கப்பட்டு வருகின்றன. முன்னர் குறிப்பிடப்பட்டதைப் போல சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்களுடன் சம்பந்தப்பட்ட விதத்தில் ஒரு சில கணக்குகள் பெயர்களைக் கொண்டிருக்கும் நிலையில் அரபு மொழியில் அல்லது நீண்ட எழுத்துக்களுடன் கூடிய விதத்தில் இப்பொழுது டசின் கணக்கில் அல்லது அதற்கும் அதிக எண்ணிக்கையிலான புதிரான பெயர்கள் காணப்படுகின்றன.

5. இந்த பொட்ஸ்களின் முதன்மை இலக்குகளாக யார் இருந்து வருகின்றார்கள் என்ற விடயம் தெளிவாகத் தெரியவில்லை - அநேகமாக மிகவும் விரிவான விதத்தில் மேற்கொள்ளப்படும் வலையமைப்பு தொடர்பான பகுப்பாய்வு அதிகரித்தளவிலான தரவுகள் என்பவற்றின் பகுப்பாய்வு என்பன இதனை நிர்ணயித்துக் கொள்ள முடியும். நாங்கள் அனுமானித்ததிலும் பார்க்க இந்த கணக்குகளை பின் தொடர்பவர்களின் கட்டமைப்பு மிகவும் நவீனமானதாக இருந்து வரமுடியும். ஏற்கனவே குறிப்பிடப்பட்டதைப் போல மிக மோசமாக பாதிக்கப்பட்டவர்களின் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்கும் Shanuki de Alwis அரசியல் விவகாரங்களிலும் பார்க்க பெருமளவுக்கு நாடகம் மற்றும் நாய்கள் போன்ற விடயங்கள் தொடர்பாகவே பேச்சுக்களை வெளியிட்டு வருகின்றார். மேலும் அவர் #lka அல்லது #srilanka பயன்படுத்தியதில்லை. எவ்வாறிருப்பினும் அவர் அரசியல் செய்திகள் மற்றும் அபிப்பிராயங்கள் என்பவற்றை மேம்படுத்தும் பல கணக்குகளைப் பின் தொடர்ந்து வருகின்றார். நாங்கள் கண்டுபிடித்திருக்கும் அளவுகோள் இந்த போலிக் கணக்குகள் செயற்பட்டுவரும் ஒரே அளவு கோலாக இருந்துவராமல் இருக்க முடியும்.

6. இதுவரையில் இது தொடர்பான எதிர்த் தாக்கங்கள் இல்லாத நிலையில் இந்த போலிக் கணக்குகளின் உரையாடல் சார்ந்த சீர்குலைவு இயல்பிலான அல்லது அரசியல் இயங்கியல் சார்ந்த விடயங்களை நிர்ணயித்துக் கொள்வது சாத்தியமற்றதாக இருந்து வருகின்றது.

## தாக்கங்களும் எதிர்கால தோற்றப்பாடுகளும்

பொதுவாக சமூக வலை தளங்கள் (SNS) தொடர்பாகவும், குறிப்பாக ருவிட்டர் தொடர்பாகவும் பொட்ஸ்கள் குறித்த தற்போதைய எழுத்தாக்கங்கள் இலங்கையில் நாங்கள் அவதானிக்கும் போக்குகளுக்கு பொருந்தக் கூடியவையாக இருந்து வரவில்லை. ஐக்கிய அமெரிக்கா, மெக்ஸிகோ மற்றும் ஏனைய நாடுகள் என்பவற்றில் பொட்ஸ்கள் அரசியல் தொர்பாடல் அல்லது பொதுமக்கள் உரையாடலில் அங்கம் வகித்து வந்துள்ளன: எனினும், அவை உள்ளடக்கங்களை உருவாக்கும் விடயத்தில் அல்லது ஏற்கனவே ருவிட்டரில் இருக்கும் விடயங்களை மீள் ருவிட் செய்யும் விடயத்தில் முழுமையாக ஈடுபட்டுள்ளன. அவற்றின் தொகுப்பு கண்டிப்பான விதத்தில் கட்டுப்படுத்தப்பட்டு

வருகின்றது. எனினும், இலங்கையில் மார்ச் மாதம் தொடக்கம் உருவாக்கப்பட்டிருக்கும் பொட்ஸ்கள் தற்பொழுது இவை எதனையும் மேற்கொள்வதில்லை.

இங்குள்ள அபாயம் இந்த பொட்ஸ்கள் செயற்படுத்தப்பட்டால் அவை ருவிட்டருக்கு அப்பாலும் கூட கவலையளிக்கத்தக்க தாக்கங்களை எடுத்துவர முடியும். பொட்ஸ்கள் அரசியலை சூழவுள்ள உரையாடல் தளத்தில் ஒரு செல்வாக்கை எடுத்துவருகின்றது என்ற விடயம் தொடர்பாக பொதுவான ஒரு உடன்பாடு காணப்படுகின்றது. ருவிட்டரில் அவை வெளிப்படையான ஒரு அம்சமாக இருந்துவரும் பொழுது இந்நிலைமை உள்ளது. ருவிட்டரின் வரையறுக்கப்பட்ட எழுத்துக்களின் எண்ணிக்கை – அண்மைய மாதங்களில் இந்த வரையறை இரட்டிப்பாக்கப்பட்டிருந்த போதிலும் - பொட்ஸ்களுக்கு இது வாய்ப்பளிப்பதாக இருந்து வருகின்றது. பொட்ஸ்களின் ருவிட்களில் உயர் மட்டத்திலான வாக்கிய கட்டமைப்பு, இலக்கணம் அல்லது ஆரம்ப மொழி என்பன அவசியப்படுவதில்லை. பாவனையாளர் டெஸ்ரொப் அல்லது கையடக்கத் தொலைபேசியூடாக ருவிட்டருடன் சம்பந்தப்படும் பொழுது பிரசுரிக்கப்பட்டிருக்கும் ஒரு ருவிட் தொடர்பாக சரி பார்ப்பினை மேற்கொள்வதற்கு அவருக்கு வாய்ப்பு கிடைப்பதில்லை.

எவ்வாறிருப்பினும், ஒரு சில ஆய்வாளர்கள் தெளிவாக கண்டுபிடித்திருக்கும் விடயம் பொட்ஸ்களின் செயலவு குறைவாக இருந்துவரும் அதேவேளையில் ஒரு உரையாடலை வடிவமைக்கும் நோக்கத்துடன் அவற்றை பயன்படுத்துவது ஒரு சரளமான அப்பியாசமாக இருந்து வரவில்லை என்பதாகும்.

> *அரசியல் உரையாடல் மீது செல்வாக்கு செலுத்துவதற்கு உயர்அளவிலான கலாசார, பொருளாதார, கால மற்றும் சமூக மூலதனம் தேவையாக இருந்து வருகின்றது என்ற விடயத்தை நாங்கள் உடனடியாகப் புரிந்து கொண்டோம். இந்த விதத்தில் பொட்ஸ்களைப் பயன்படுத்துவது நாங்கள் எதிர்பார்த்திராத ஒரு சில முறைமை சார்ந்த நவீன அம்சங்களை அவசியப்படுத்துகின்றது. இந்தக் கண்டுபிடிப்பு மிகவும் சுவாரஸ்யமானதாகும். ஏனெனில் கணிசமான அளவிலான நிதி வழங்கல் மற்றும் பொட்ஸ்கள் தொடர்பாக ஏற்கனவே கொண்டிருக்கும் அறிவு என்பவற்றைக் கொண்டிராதவர்கள் அரசியல் உரையாடல் மீது உடனடியாக ஒரு தாக்கத்தை எடுத்துவரக்கூடிய ஆற்றலைக் கொண்டிருக்கவில்லை என்பதாகும்[11].*

எமக்குக் கிடைக்கும் தரவுகளைக் கொண்டு பார்க்கும் பொழுது இது பொழுது போக்கிற்காக காரியங்களைச் செய்யும் ஒரு நபரின் வேலையாகவோ அல்லது அரசியல் தொடர்பாடல் அல்லது சமூக வலைத்தளங்கள் அல்லது குறிப்பாக ருவிட்டரில் செயற்பட்டுவரும் எப்போதாவது அரசியல் கருத்துக்களை கூறும் நபரின் செயலாகவோ இருந்துவரவில்லை என்ற எனது முதன்மையான அனுமானத்திற்கு இது வழிகோலுகின்றது. இந்த பொட்ஸ் பரவலின் பின்னணியில் ஒரு உத்தியும் உள்நோக்கமும் இருந்து வருகின்றது. சமூக வலைத்தளங்களிலான இதே மாதிரியான முயற்சிகள் ரஷ்யா மற்றும் சீனா போன்ற நாடுகளின் அரசாங்கங்களினாலும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. sockpuppet' கணக்குகள் என அறியப்படும் முறைக்கு ஊடாக அது அறியப்பட்டுவந்துள்ளது[12]. அண்மையில் இலங்கையில் அவதானித்த பொட்ஸ் சீர்குலைவுச் செயற்பாடு இதுவரை நாங்கள் பார்த்திராத ஒரு நிலைமை என்ற விடயத்தை ஆசிரியர்கள் வலியுறுத்திய போதிலும் பொட்ஸ்கள் தமது இரகசிய எதிர்ப்புக்களை நிறைவேற்றுக்கொள்ளும் பொறுப்பு பல்வேறு ஒன்றுக்கொன்று குறைநிரப்புச் செய்யும் தந்திரோபாயங்களை எவ்வாறு பின்பற்றி வருகின்றது என்பதற்காக அறிக்கைகள் பரவலாக கிடைக்கின்றன[13].

---

[11] *Automation, Algorithms, and Politics| Bots and Political Influence: A Sociotechnical Investigation of Social Network Capital*, Murthy, Power, Tinati et al, http://link.galegroup.com.ezproxy.otago.ac.nz/apps/doc/A478974418/AONE?u=otago&sid=AONE&xid=1f166680

[12] The Bots That Are Changing Politics, https://motherboard.vice.com/en_us/article/mb37k4/twitter-facebook-google-bots-misinformation-changing-politics

[13] Ibid

- Sockpuppets (ஓரளவுக்கு மனித/ ஓரளவுக்கு- bot அல்லது வெறுமனே cyborgs ஆகயிருந்து வரும்) முறை சம்பாசனையை துவக்கி வைப்பதுடன் புதிய கருத்துக்களை முன்வைத்து ஒன்லைன் சமூகங்களுக்கு மத்தியில் கலந்துரையாடலை நெறிப்படுத்து செல்லுகின்றது[14].
- அதன் பின்னர் இக்கருத்துக்கள் "amplifier bots," என நாங்கள் அழைக்கும் பல்லாயிரக் கணக்கான தன்னியக்க கணக்குகள் மூலம் பரவலாக்கப்படுகின்றன. அதே சொற்கள் மீண்டும் ருவிட்டுக்களில் அனுப்பப்படுவதுடன், மீண்டும் பிரசுரிக்கப்படுகின்றன.
- "Approval bots" என்ற பொட்ஸ்கள் திட்டவட்டமான ருவிட்டுக்களுடன் சம்பந்தப்படுகின்றன. அல்லது நம்பகத்தன்மையை அதிகரிப்பதற்கும் அக்கருத்துக்கு சட்டபூர்வத்தன்மையை வழங்குவதற்கும் என அது, "liking," "retweeting," அல்லது "replying"என்பவற்றை மேற்கொள்கின்றன.
- பாராதூரமான விதத்தில் கருத்து வேறுபாடுகள் காணப்படும் விடயங்கள் தொடர்பாக தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகிய தரப்புக்களை சம்பாஷனையிலிருந்து வெளியேற்றும் ஒரு முயற்சி என்ற முறையில் அவர்களைத் துன்புறுத்தி அவர்கள் மீது தாக்குதல் தொடுப்பதற்கென[15] bots பயன்படுத்தப்படுகின்றன.

ஒரு நிறுவனம் என்ற முறையிலும் ஒரு இணைய ஊடகம் என்ற முறையிலும் ருவிட்டர் நிறுவனத்தை இது தொடர்பாக கண்டனம் செய்தல் வேண்டும். பொட்ஸ்களின் வலிமைக்கு பங்களிப்புச் செய்யும் ஒரு விடயம் சமூக வலைதளக் கம்பனிகளின் ‘black box algorithms’ஆகுமென ஒரு சிலர் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த வடிவம் பொட்ஸ்கள் தோன்றுவதற்கு இடமளித்து, அதை துஷ்பிரயோகத்திற்கான வளமான களமாக இருந்து வருவதற்கு இடமளிக்கின்றன. அண்மையில் நியுயோர்க் ரைம்ஸ் இதழில் உலகளாவிய ரீதியில் வளர்ச்சி கண்டுவரும் bot கைத்தொழில் தொடர்பாக மிக முக்கியமான ஒரு கட்டுரை வெளியிடப்பட்டிருந்தது.[16] அக்கட்டுரை Devumi என்ற விடயத்தை எடுத்துக் காட்டியிருந்தது. அது தவிர பின்வரும் காரியங்களை செய்யக்கூடிய பொட்ஸ்களுக்கான வாய்ப்பினை வழங்கும் MonsterSocial என்ற வடிவமும் காணப்படுகின்றது[17],

- உங்களுடைய அனைத்து கணக்குகளினூடாக ஒரு ருவிட் ஒன்றைப் பதிவுசெய்யலாம்
- உங்களுடைய அனைத்து கணக்குகளினூடாக குறித்தவொரு ருவிட் பதிவு தொடர்பாக கருத்து தெரிவித்தல்
- உங்களுடைய அனைத்து கணக்குகளினூடாக குறித்தவொரு ருவிட் பதிவை மீள ருவிட் செய்தல்
- உங்கள் அனைத்து கணக்குகளுக்கும் ஒரே புரொபைலை தொடர்தல்.
- அண்மையில் குறிப்பிட்ட ஒரு சொல்லை பயன்படுத்திய புரொபைலை பின்தொடர்தல்
- உங்களுடைய புரொபைலை பின் தொடரும் புரொபைல்களைப் பின் தொடருதல்
- குறித்தவொரு புரொபைல் பின்தொடரும் புரொபைல்களைப் பின் தொடருதல்
- உங்கள் அனைத்து கணக்குகளின் ஊடாக குறித்த ஒரு புரொபைலை பின் தொடராதிருத்தல்
- உங்கள் புரொபைல்களை பின் தொடரும் புரொபைல்களைப் பின் தொடராதிருத்தல்
- நீங்கள் பின் தொடரும் புரொபைல்களை பின் தொடராதிருத்தல்
- உங்களை மீண்டும் பின் தொடராதிருக்கும் புரொபைல்களை பின் தொடராதிருத்தல்
- உங்களுடைய அனைத்துக் கணக்குகளினூடாக விசேடமான ருவிட் ஒன்றுக்கு விருப்பத்தைத் தெரிவிக்க முடியும்

[14]*Sockpuppets, Secessionists, and Breitbart*, Jonathan Morgan, https://medium.com/data-for-democracy/sockpuppets-secessionists-and-breitbart-7171b1134cd5, Data for Democracy
[15]*Effort to Expose Russia’s ‘Troll Army’ Draws Vicious Retaliation*, https://www.nytimes.com/2016/05/31/world/europe/russia-finland-nato-trolls.html?_r=1, New York Times
[16]*The Follower Factory*, https://www.nytimes.com/interactive/2018/01/27/technology/social-media-bots.html
[17]https://monstersocial.net/features/twitter-bot/

- விசேடமான ஒரு சொல்லை பயன்படுத்துவதன் மூலம் அண்மையில் பதிவிடப்பட்ட ருவிட்டுக்கு விருப்பத்தை தெரிவிக்கமுடியும்
- உங்களுடைய அனைத்து கணக்குகளினூடாக விசேடமான புரொபைலில் உள்ள ருவிட்டுக்கு விருப்பத்தைத் தெரிவிக்க முடியும்
- புரொபைல்களில் விசேடமான சொல்லை பயன்படுத்தி பதிவிடப்பட்ட ருவிட்கள் பலவற்றுக்கு விருப்பத்தைத் தெரிவிக்க முடியும்
- நீங்கள் விருப்பமான பதிவுகளை அகற்றுதல்
- திட்டவட்டமான புரொபைல்களை பின் தொடர்வதிலிருந்து அல்லது பின் தொடராத நிலையிலிருந்து நீக்குதல்

இதே காரியதை பொருமளவுக்கு மேற்கொண்டுவரும் வேறு பல கம்பனிகளும் இருந்து வருகின்றன. Bot கைத்தொழில் உலகலாவிய ஒரு தொழிலாக இருந்து வருவதுடன், அது கவனம் செலுத்தும் விடயங்கள் உள்ளூர் மட்ட விடயங்களாக காணப்படுகின்றன. இந்த ஒரு விடயத்தில் அக்கறை கொண்டிருக்கும் எந்தவொரு தரப்பும் ஏற்கனவே இருக்கும் தொழில்நுட்பங்களை இலகுவில் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வாய்ப்பு, திட்டவட்டமான பின்புலம் சார்ந்த அனுபவம், அதேபோல கணக்குகள் மற்றும் திட்டவட்டமான சமூக வலைதள மேடைகள் இந்தக் காரியத்தை பெருமளவுக்கு இலகுபடுத்துவதற்கு பங்களிப்புச் செய்து வருகின்றது. மார்ச் தொடக்கத்தில் BBC அறிக்கையிட்டவாறு[18], ஒரு bot இன் ஆயுள் காலம் முழுவதும் உருவாக்கப்படும் உள்ளடக்கத்தின் அளவை மற்றும் பயன்படுத்தக்கூடிய பொட்ஸ்களின் எண்ணிக்கையை ஒப்பிடும் பொழுது இவை அனைத்தையும் மிக குறைந்த செலவில் மேற்கொள்ளக்கூடியதாக இருந்து வருகின்றது. அதேபோல குறைந்த செலவில் பெரும் எண்ணிக்கையிலான bots செயற்படுத்தக்கூடிய வாய்ப்பு இருந்துவருகின்றது. ருவிட்டர் நிறுவனம் 2018 ஜனவரி மாதம் தொடக்கம் ஆகக்குறைந்தது இந்தப் பிரச்சினை குறித்து அறிந்திருந்தது. அது ஜனவரி மாதத்தில் உலகளாவிய ரீதியில் செயற்பட்டு வந்த பாரிய எண்ணிக்கையிலான bot ஐ அகற்றியது[19], எனினும், அண்மையில் தோன்றியிருக்கும் bot ஆக்கிரமிப்பு தொடர்பாக அது காட்டிவரும் மௌனம் மற்றும் செயல் முடக்கம் என்பன botகளின் பிரமாண்டமான உருவாக்கத்தின் காரணமாக ருவிட்டர் நிறுவனம் அதிர்ச்சியடைந்துள்ளது போல் தெரிகின்றது[20].

இதனுடன் சம்பந்தப்பட்டிருக்கும் பிரச்சினை ஓர் ஆராய்ச்சி முயற்சி என்ற முறையில் பெருமளவுக்கு அதிநவீனமான botகளை கண்டுபிடிப்பது சிரமமாக இருந்து வருவதாகும் - அல்லது பிரமாண்டமான மட்டத்தில் தனிப்பட்ட கணக்குகளை கட்டுப்படுத்தும் செயற்பாடு சாத்தியமற்றதாக இருந்து வருகின்றது. ஏனெனில் இந்த அரங்குகள் API பாவனையை நிர்வகிக்கும் கொள்கைகளுக்கு ஊடாக வலுவான தரவுச் சேகரிப்பு செயற்பாட்டிற்கு வாய்ப்பளிப்பதில்லை (கேம்பிரிட்ஜ் அனலிடிகா சம்பவத்தின் பின்னர்). API வரையறைகள் காரணமாக எமது தரவுச் சேகரிப்பு செயற்பாடு பெருமளவுக்கு வேதனை அளிப்பதாக இருந்து வந்தது. நாங்கள் இங்கு மிகவும் கடுமையான கஷ்டத்துக்கு மத்தியில் செய்திருக்கும் காரியத்தை (இலாபமற்ற)[21] API வரையறைகளை நிறுவுவதற்கு நிதி வசதிகளை பெற்றுக்கு கொள்ளும் அணி ஒன்றினால் மிகச் சிறப்பாக செய்திருக்க முடியும்.

## Bot ஐ கையாளுதல்

Bot களை கண்டுபிடித்து அகற்றும் விடயம் உண்மையிலே பெருமளவுக்கு ஒரு சவாலாக இருந்து வருகின்றது. மாலிந்த சமரக்கோன் (https://projects.malinthe.com/quickblock/index.php) போன்ற இலங்கையர்களினால் உருவாக்கப்பட்ட புத்தாக்க இயல்பிலான தீர்வுகள் ருவிட்டர் கணக்காய்வுகள் (https://www.twitteraudit.com) போன்ற உருவாகியிருக்கும் ஏனைய கருவிகளுடன் இணைந்து

[18] http://www.bbc.com/news/blogs-trending-43218939
[19] http://www.bbc.com/news/blogs-trending-43218939
[20] https://mashable.com/2018/01/29/twitter-bots-purge-influencers-accounts/#Enc_lEaG5iqh
[21] https://techcrunch.com/2017/11/14/twitter-launches-lower-cost-subscription-access-to-its-data-through-new-premium-apis/

கொள்கின்றது.[22] இவையிரண்டும் எந்நேரமும் போலிமிகுந்த சாதகமான விளைவுகளை ஏற்படுத்தும். Bots உற்பத்தி செய்யப்படும் அளவு மற்றும் வேகம் என்பவற்றின் பின்னணியில் இந்தக் கருவிகளுக்கு சிறப்பான மாற்றுக்கள் இருந்துவரவில்லை. குறிப்பாக ருவிட்டர் நிறுவனம் மூன்று வழிகளில் ஒன்றுக்கு ஊடாக bot களுக்கு எதிராக மிகவும் ஆரம்ப மற்ற பாதுகாப்பற்ற வழிமுறை ஒன்றை மட்டுமே வழங்கி வருகின்றது. Bot கணக்குகளை கையாளுதல் முறை ஊடாக பரீட்சித்த பின்னர் வரிசை ஒழுங்கில் அவற்றை அது தடைசெய்கின்றது. மற்றொரு கணக்கினால் அல்லது பாவனையாளரினால் உருவாக்கப்பட்ட தடைப் பட்டியல் ஒன்றை பெற்றுக்கொள்வதன் மூலம் அது அதனை மேற்கொள்கின்றது. இதன் காரணமாக பின்தொடர்பவர்களின் வேண்டுகோளை தன்னியக்க முறையில் அனுமதிக்க முடியாதொரு நிலைமை காணப்படுகின்றது. கையாளுதலுக்கும் ஒரு செயன்முறைக்கு ஊடாகவே அந்த வேண்டுகோள்களை கையாள வேண்டிய நிலைமை இருந்து வருகின்றது. Bot கணக்குகளின் பெருக்கத்திற்கு இவை எவையும் இலக்கிய ரீதியான அல்லது யதார்த்த ரீதியான தீர்வுகளாக இருந்து வரவில்லை.

தீவிரமடைந்து வரும் Bot பிரச்சினைகளுக்கு எதிர்வினையாற்றும் விதத்தில் ருவிட்டர் நிறுவனம் இவ்வருட தொடக்கத்தில்[23] அதன் API விதிமுறைகளை மாற்றயமைத்தது. இங்கு முக்கியமாக குறிப்பிட வேண்டிய ஒரு விடயம் தற்பொழுது இலங்கையிலும் குறிப்பாக பரவலான விதத்தில் தென் மற்றும் தென் கிழக்காசிய பிராந்தியம் எங்கும் இடம்பெற்று வரும் Bot களின் பெருக்கம் இந்த புதிய கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும் தொடர்ந்து 2018 மார்ச் 23 ஆம் திகதி தொடக்கம் இடம்பெற்றுவருகின்றதாகும். Botகள் தொடர்பான ஒரு புலன் விசாரணையை மேற்கொள்வதாக 2017 ஜூன் மாதத்தில் ருவிட்டர் நிறுவனம் ஒரு வாக்குறுதியை வழங்கியிருந்தது என்ற விடயத்தை இங்கு நினைவுகூர்வது பொருத்தமாகும்[24]. அதன் பின்னர் அந்நிறுவனம் இது குறித்து என்ன செய்திருக்கின்றது என்பது தெளிவாகத் தெரியவில்லை.

தேர்தலுடன் சம்பந்தப்பட்ட Bots பதிவுகள் கலந்துரையாடலின் பின்புலம் மீது தாக்கத்தை செலுத்திவந்துள்ளன அல்லது அதனை சீர்குலைத்துள்ளன என்ற விடயம் தெளிவாக தெரியவந்திருக்கும் ஒரு விடயமாகும். இது 2010ஆம் ஆண்டில் இடம்பெற்ற மெக்சிக்கோ பொதுத் தேர்தலையும் உள்ளடக்குகின்றது. மேலும் ரஷ்யாவில் கிரம்பிடனுக்கு எதிரான எதிரப்புச் செயற்பாடுகள் மற்றும் குறிப்பாக 2016ஆம் ஆண்டின் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் என்பவற்றையும் இங்கு குறிப்பிட முடியும். ரஷ்யாவின் Bot பதிவுகள் மீண்டும் ருவிட் பதிவிடப்பட்டதாகவும் தற்போதைய அமெரிக்க ஜனாதிபதியின் ருவிட்டர் கணக்கு 470,000 தடவை[25] மீள ருவிட் பதிவிடப்பட்டதாகவும் ஒரு சில ஊடக அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. மலேசியாவில் மிக அண்மையில் இடம்பெற்ற தேர்தலுக்கு முன்னர் ருவிட்டரில் Bots பதிவுகள் பெருவெள்ளமாக பெருகியதாக ருவிட்டர் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. அந்த ருவிட் செய்திகள் அரசாங்க சார்பான செய்திகளையே கொண்டிருந்தன.[26] அந்த அறிக்கையில் மேற்கோள்காட்டப்பட்டுள்ளவாறு வாசிங்கடனிலிருந்து செயற்படும் அத்திலாந்தி பேரவையின் சிந்தனைக் குழாமின் டிஜிற்றல் தடையவியல் ஆராய்ச்சி ஆய்வு கூடத்தின் (DFR) ஆய்வாளர் ஒருவர் ஒரு வாரக் காலப்பகுதியில் மலேசியத் தேர்தல் தொடர்பான 17,000 Bots பதிவுகள் ருவிட்டரில் இடம் பெற்றதாக குறிப்பிட்டார். பெரும்பாலான பாவனையாளர்கள் உண்மையான ருவிட் கணக்கிலிருந்து போலியான ஒரு கணக்கை அல்லது bot ஐ கண்டறிந்து கொள்ள முடியாதவர்களாக இருந்து வருகின்றார்கள் என Extantacademic ஆராய்ச்சி நிறுவனம் குறிப்பிடுகின்றது. தென் கலிபோனியா மற்றும் இந்தியா

[22]There are many others online. For a good overview, see https://www.poynter.org/news/how-tell-if-you-have-fake-twitter-followers-and-how-remove-them

[23]There are many others online. For a good overview, see https://www.poynter.org/news/how-tell-if-you-have-fake-twitter-followers-and-how-remove-them

[24]https://blog.twitter.com/developer/en_us/topics/tips/2018/automation-and-the-use-of-multiple-accounts.html

[25]https://www.motherjones.com/politics/2017/10/twitter-bots-distorted-the-2016-election-including-many-controlled-by-russia/ and https://www.bloomberg.com/news/articles/2018-01-26/twitter-says-russian-linked-bots-retweeted-trump-470-000-times

[26]https://www.reuters.com/article/us-malaysia-election-socialmedia/ahead-of-malaysian-polls-bots-flood-twitter-with-pro-government-messages-idUSKBN1HR2AQ

பல்கலைக்கழகம் என்பவற்றினால் 2017ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கைஇ (அது வெளியிடப்பட்ட சந்தர்ப்பத்தில்) உலகளாவிய ரீதியில் 15% வரையிலான ருவிட்டர் கணக்குகள் அல்லது – 45 மில்லியன் தனிப்பட்ட கணக்குகள் போலியானவை என தெரிவிக்கின்றது[27].

உலகளாவிய நிலைமை இவ்வாறிருந்து வந்த போதிலும் 2018 மார்ச் மாதத்தில் திகன சம்பவங்களுக்கு பின்னர் பொட்ஸ் உற்பத்தில் இடம்பெற்ற வெளிப்படையான அதிகரிப்பு 2015 ஆம் ஆண்டில் இடம்பெற்ற மற்றொரு உச்ச கட்டத்தை பின்பற்றுவது போல் தெரிகின்றது. இந்த விசேட சம்ப இயல்பு தற்செயல் அல்லது தன்நிகழ்வு என்பவற்றுக்கு பதிலான அக்கறை மற்றும் முதலீடு என்பன மேற்கொள்ளப்பட்டு வருகின்ற என்ற விடயத்தை குறிப்பிடுகின்றது. Bot உற்பத்தி ஒரு குழாயாக இருந்து வருவதுடன் எங்கோ ஒரு இடத்திலிருந்துவரும் எவரோ ஒரு நபர் அதன் நீரோட்டத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கின்றார்.

இறுதியாக மாலைதீவில் நாங்கள் அவதானித்ததைப் போல trolls, உடன் இணைந்து செயற்படும் விதத்தில் Bots இருந்துவர முடியும். 'smoke screening' அல்லது 'hijacking the hashtag' போன்ற தொழில்நுட்ப வாரத்தைகளை பெப்ரவரி மாதத்தில் மாலைத்தீவு தொடர்பாக ருவிட்டர் தளத்தில் *Groundviews* பதிவிட்டிருந்தது.[28] மாலைத்தீவில் ட்விட்டர் வழிகாட்டுதல் (Twitter guidelines) தெளிவாக மீறப்பட்டிருந்ததன் விளைவாக பெருந்தொகையான கணக்குகள் முடக்கப்பட்டன. இது நாட்டின் அரசியல் தொடர்பாடலின் மீது ஏற்படுத்தியிருக்கும் தாக்கம் குறித்து தெளிவாக தெரியவரவில்லை. தெளிவாகத் தெரியும் விடயம் என்னவென்றால் உபாய ரீதியாக பயன்படுத்தப்படும் பொழுது Bots பதிவுகளால் தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பதாகும். ஆராய்ச்சி நோக்கங்களுக்கென பயன்படுத்தப்பட்டு வரும் உண்மையான bots தொடர்பாக 2011 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட ஒரு கள அறிக்கையில் Bots பதிவுகள் "ஏனைய பாவனையாளர்களின் பொது அக்கறைகளை நிர்ணயிக்கக்கூடிய" ஆற்றலை கொண்டிருக்க முடியுமென ஆசிரியர்கள் ஊகம் தெரிவித்திருந்தார்கள். பதிவுகள் "பாரிய பாவனையாளர் வலையமைப்புக்களுக்குள் இலக்குகள் மீது இலக்குகளை நுட்பமாக வடிவமைத்து அவற்றின் மீது செல்வாக்கை செலுத்தக்கூடிய ஆற்றலைக் கொண்டிருக்கும் என்றும், இலக்குகளுடன் அவற்றை தொடர்புபடுத்தும் என்றும் அல்லது குறிப்பிட்ட ஒரு திசையில் பொதுசன அபிப்பிராயத்தை பகிர்ந்த கொள்வதற்கும் பொதுக் கருத்தை உருவாக்குவதற்கும் பங்களிப்புச் செய்யும் என்றும்" குறிப்பிடுகின்றது.

இவை அனைத்தினதும் பொருள் ருவிட்டர் தளத்தில் அதிக எண்ணிக்கையிலான Bots இருந்து வருகின்றன என்பதும் அவை வலையமைப்புக்களாக ஒன்றிணைந்து செயற்படும் ஆற்றலைக் கொண்டிருப்பதுடன் இணையதளத்தில் இடம்பெற்றுவரும் உரையாடல்களை சீர்குலைப்பதற்கென பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பதுமாகும். அது முக்கியமான வரலாற்று ரீதியான கருத்துகள் அல்லது அவற்றுக்கு வழிகோலக்கூடிய கருத்துக்கள் என்பவற்றின் மீது மிகவும் பாரதூரமான தாக்கங்களை எடுத்துவர முடியும்.

Bots பரிசீலனை செய்யும் விடயம் இப்பொழுது இலங்கையின் ருவிட்டர் துறையில் ஒரு நிரந்தரமான அம்சமாகக் காணப்படுகின்றது. நாட்டில் தேர்தல்கள் அல்லது சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று இடம்பெறவிருக்கும் சந்தர்ப்பங்களில் அதன் வீக்கம் மேலும் அதிகரிக்கக்கூடிய நிலைமை காணப்படுகின்றது. இதனுடன் நேரடியாக சம்பந்தப்பட்டிருக்கும் பிரஜைகளின் எண்ணிக்கை மற்றும் இதன் மூலம் செல்வாக்கு உட்படுத்தப்படுபவரின் எண்ணிக்கை என்பவற்றின் அடிப்படையில் இதற்கான அரசியல் செயற்பாட்டாளர்களின் முதல் எதிர்வினை அநேகமாக Bot எதிர்ப்பு உத்திகளில் முதலீடு செய்வதாகவே இருந்துவரும். அதன் விளைவாக மிகவும் செயல் முனைப்பும் தூண்டல் சக்தியும் கொண்ட வலையமைப்பை கட்டுப்பாட்டில் எடுத்து வருவதற்கான ஒரு பன்முக இயல்பிலான ஒரு இணைய வெளிப் போர் தோன்றக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது. இது நாட்டின் பொதுவான சுதந்திரம் அல்லது அரசியல் பின்புலம் என்பவற்றின் மீது Bot பதிவுகள் எடுத்துவரக் கூடிய அச்சுறுத்தலுக்கு மேலதிகமான ஒரு விடயமாக இருந்து வருகின்றது. அது "hashtag spamming"

---

[27]https://www.cnbc.com/2017/03/10/nearly-48-million-twitter-accounts-could-be-bots-says-study.html

[28]https://twitter.com/groundviews/status/963377862345678848

இயற்கையான போக்குகளின் உருவாக்கம் அடுத்து வரும் செயற்கை வாரி பிரச்சார இயக்கங்கள் மற்றும் அரசியல் பிரச்சாரங்கள் என்பவற்றை உள்ளடக்க முடியும். அறிவுத்துறை சார்ந்த எழுத்தாக்கங்கள் இணைய வழிக்கு ஊடான அரசியல் தொடர்பாடலின் சவால்களை எடுத்துக் காட்டுகின்றன.

இந்த அறிக்கை அதன் வரையறுக்கப்பட்ட பரப்பு எல்லை மற்றும் தரவுகள் என்பவற்றுக்கு மத்தியிலும் கூட தற்பொழுது தாங்கள் எதிர் கொண்டுவரும் அரசியல் களம் மற்றும் எதிர்கால திட்டங்கள் என்பன குறித்த ஒரு தெளிவான சித்திரத்தை வழங்குகின்றது. முதன்மையான சமூக வலைதளங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாரியளவிலான செயற்பாடுகளின் விளைவாக எதிர்காலத்தில் தோன்றக்கூடிய ஆபத்துக்களையும் அது எடுத்துக் காட்டுகின்றது. சமூக வலைதளங்கள் இன்று 18-34 வயதுப் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கான பிரதான செய்தித்தளங்களாக இருந்துவரும் நிலையில் இது இடம்பெறுகின்றது. இது தொடர்பான ஆபத்துக்கள் அரசாங்கத்திலிருக்கும் நபர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால், ருவிட்டரில் காணப்படும் பொய்களுக்கு எதிர்வினையாற்றுவதிலுள்ள சவால் மற்றும் அதன் பாவனையாளர்கள் எதிர்கொள்ளும் சவால்களையும் இங்கு குறிப்பிடவேண்டும். நிறுவனம் இது தொடர்பாக மௌனம் காத்துவருகின்றது. அந்த நிலையில் இந்தப் பிரச்சினை பாரதூரமான ஒரு கட்டத்தை அடைந்திருப்பதுடன் சர்வதேச செய்தி சேவைகள் அது தொடர்பாக அறிக்கையிட்டு வருகின்றன. அது சிலிக்கன் பள்ளத்தாக்கில் செயற்படும் சமூக வலைதள நிறுவனங்கள் தாங்கள் உருவாக்கியிருக்கும் வலைத்தளங்கள் மீதான கட்டுப்பாட்டை இழந்துவருகின்றன என்பதனைக் குறிக்கின்றன. இன்று சமூக வலைதளங்கள் அவை எத்தகைய ஒரு கலாசாரத்திற்காக பின்புலத்திற்காக உருவாக்கப்பட்டுவந்தனவோ அத்தகைய ஒரு கலாசாரத்திற்கும் பின்புலத்திற்கும் நேர்மாறான விதத்தில் செயற்பட்டு வருவதனை அவதானிக்க முடிகின்றது. இதன் முடிவுப் பாவனையாளர்களும் இந்த விடயம் தொடர்பாக அக்கறை செலுத்துவது அவசியமாகும். ருவிட்டரிலும் பொதுவாக சமூக வலைதளங்களிலும் இன்று செயற்பட்டு வருபவர்களில் பலர் இணையத்தில் வரும் விடயங்களை வலுவான விதத்தில் சரி பார்த்து அதன் துல்லியத்தன்மை குறித்து கேள்வி எழுப்பாமல் வெறுமனே அத்தகைய விடயங்களுக்கு எதிர்வினையாற்றி வருகின்றார்கள். நாங்கள் இங்கு முன்வைக்கும் தரவுகள் நீங்கள் மீள் ட்விட் ஒன்றை இடுவதற்கு முன்னர் மற்றும் எதிர்வினையாற்றுவதற்கு முன்னர் மீள் பரீட்சிப்பு ஒன்றை மேற்கொள்ளவேண்டும் என்ற தெளிவான எச்சரிக்கையை விடுகின்றன. இது தொடர்பாக அரசாங்கத்தின் செயலற்ற நிலை மற்றும் இணையதளம் மாசுபடுத்தப்படுவது தொடர்பாக ட்விட்டர் நிறுவனம் காட்டிவரும் மௌனம் என்பவற்றுக்கு மட்டும் நாங்கள் பழி சுமத்த முடியாது. எங்களுடைய சொந்த அலட்சிய உணர்வு, அறியாமை அல்லது தவறான நம்பிக்கை என்பவற்றின் காரணமாக நாங்களும் இந்த நிலைமைக்கு பங்களிப்புச் செய்திருக்கின்றோம்[29].

[29]Social bots: Voices from the front, Pearce Hwang, M. Nanis, *Social Mediator*, 2012.

# கட்டுரையாளர்கள்

**சஞ்சன ஹத்தொட்டுவ** *Groundviews* தத்தின் ஸ்தாபக ஆசிரியராவார். அவர் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் மூத்த ஆய்வாளராக பணிபுரிந்து வருவதுடன், அங்கு ஊடகப் பிரிவுக்குத் தலைமை தாங்குகின்றார். அவர் ICT4Peace Foundation அமைப்பின் ஆலோசகராகவும் செயற்பட்டுவருகின்றார். ஹத்தொட்டுவ தற்பொழுது நியூசிலாந்து, ஒட்டாகா பல்கலைக்கழகத்தின் கலாநிதி பட்ட மாணவராக இருந்து வருவதுடன் சமூக வலைதளங்கள் வன்முறை மற்றும் அரசியல் என்பன தொடர்பான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வருகின்றார்.

**யுதன்ஜய விஜேரத்ன** விஞ்ஞான புனைகதை எழுத்தாளராகவும், பன்முக சாக் நாடுகள் மற்றும் ஏசியன் நாடுகள் என்பவற்றின் ஆராய்ச்சி செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் ஒரு சிந்தனைக் குழாமான LIRNE*asia* குழுவில் தரவு ஆய்வாளராகவும் செயற்பட்டு வருகின்றார். அவர் சமூக வலையமைப்புக்கள் மற்றும் தகவல் பாய்ச்சல் என்பன தொடர்பாக ஆய்வுகளை முன்னெடுத்து வருகின்றார். இலங்கையில் *Icaruswept* வலைதளத்திற்கு ஊடாக அரசியல் கருத்துக்களுக்கு தரவுப் பகுப்பாய்வுகளை எடுத்துவந்தமை தொடர்பாக தமது தாய் நாடான இலங்கையில் நன்கு அறியப்பட்டுள்ளார். அவர் செய்தி செயற்பாடுகள் அதை முன்னெடுப்பதுடன் இணைய விளையாட்டுக்களையும் வடிவமைத்து வருகின்றார். 2015ஆம் ஆண்டு இலங்கை பொதுத் தேர்தல் மீது செல்வாக்குச் செலுத்திய காரணிகளை அவர் பகுப்பாய்வு செய்திருப்பதுடன், நூற்றுக் கணக்கான செய்தி அறிக்கைகள் நாள் ஒன்றுக்கு பல மில்லியன் கணக்கான ருவிட் செய்திகள் என்பவற்றை பயன்படுத்தி 2016ஆம் ஆண்டின் ஐக்கிய அமெரிக்க தேர்தல்களை பகுப்பாய்வு செய்யும் ஒரு கூட்டு அணிக்கு தலைமை தாங்கியிருந்தார். அவரது *Numbercaste* நாவல் உட்பட விமர்சன ரீதியில் பாராட்டுக்களை பெற்றிருக்கும் பல நாவல்களை வெளியிட்டிருக்கிறார். தற்பொழுது பொது நன்மைக்காக பாரிய தரவுகளை பயன்படுத்துவது தொடர்பான ஒரு நூலை அவர் ஹார்பர் கொலின்ஸ் நிறுவனத்திற்காக தயாரித்து வருகின்றார்.

**ரேமன்ட் செராட்டோ** Democracy Reporting International அமைப்பில் ஆசியா, ஆளுகை மற்றும் புத்தாக்கம் என்பன தொடர்பான மூத்த நிகழ்ச்சித்திட்ட அதிகாரியாகச் செயற்பட்டு வருகின்றார். அவர் DRI நிறுவனத்தின் மியன்மார் மற்றும் தொழில்நுட்ப மற்றும் ஜனநாயகப் பணிகளை நிர்வகித்து வருவதுடன், அண்மையில் ஜேர்மன் தேர்தலின் போது சமூக வலைதளங்களைக் கண்காணிப்பதற்கான ஒரு கருத்திட்டத்தில் தலைமை தாங்கினார். சமூக வலைதளங்கள் வெறுப்பைத் தூண்டும் பேச்சுக்கள் மற்றும் தேர்தல்கள் என்பன தொடர்பான அவருடைய ஆராய்ச்சி The Guardian, CNN, and The Irrawaddy என்பனவற்றில் வெளியிடப்பட்டுள்ளன.